21st July 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir. A resolution containing the request has been received.

(இ) As the question is one of permitting two holidays in a week, a decision has to be taken by the Central Government. A copy of the resolution has, therefore, been forwarded to the Government of India for disposal.

Night schools for workers

* 491 Q.—SRI K. MOOKIAH THEVAR (on behalf of SRI K. A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to start evening classes and night schools for the working people?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

ஆலைகள் மூடுதல் (கோயம்புத்தூர், மதுரை)

* 492 கேள்வி.—திரு. கே. மூக்கையா தேவர் (திரு. முனு. ஆதி அவர்கள் சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) கோவையிலும் மதுரையிலும் சில ஆலைகள் மூடப்பட்டதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நிலை என்ன?

(இ) அரசாங்கம் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No mill is reported to have been closed in Coimbatore recently.

In Madurai, Sri Kothandaram Mills laid off their workers from 27th April to 2nd May 1962 and Balakrishna Mills laid off their workers from 30th April to 2nd May 1962 and as a result of the discussion of the Commissioner of Labour with those concerned, both the mills resumed work from 3rd May 1962 with 48 looms on each shift. The affected workers were paid statutory compensation for the period of lay off.

(இ) The Commissioner of Labour held discussions with the representatives of the workers and the managements of those mills and the lay off in those mills was discontinued and work resumed with effect from 3rd May 1962.

திரு. கே. மூக்கையா தேவர் : அந்த மில்கள் எந்தக் காரணத்தால் மூடப்பட்டன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லி மூடினார்கள்.

திரு. கே. மூக்கையா தேவர் : புதிதாக வரி போடப்பட்டது என்ற காரணத்தினால், அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தால் மில்களை மூடினார்களா? உண்மையிலேயே அந்த வரியினால் அவர்கள் பாதிக்கப்படவில்லையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களுடைய மனதிலே புகுந்து பார்த்து, அவர்கள் உணர்ச்சியைச் சொல்ல முடியுமா? ஏதோ மூடினார்கள், பின்னர் திறந்தார்கள்.